**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை**

**முன்னிலை: திரு.முகமது யூசுப் நவாஸ், பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை**

**2024ம் ஆண்டு ஜீன் திங்கள் 27ம் நாள் வியாழக்கிழமை**

**முதலேற்பு வழக்கு எண்.59/2022**

1. கருப்பாயி
2. புஷ்பவள்ளி
3. இருளாயி
4. நதியா
5. லிங்கபிரபு .........வாதிகள்

-எதிர்-

1. மாவட்ட ஆட்சியர்அவர்கள்,
   சிவகங்கை
2. வட்டாட்சியர் அவர்கள்,
   மானாமதுரை .......பிரதிவாதிகள்

இவ்வழக்கு 29.09.2022-ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டு கோப்புக்கு எடுக்கப்பட்டு 27.10.2022ம் தேதியன்று வழக்கு வாய்தாவிற்கு எடுக்கப்பட்டு 24.06.2024-ம் தேதியன்று என் முன்னால் விசாரணைக்காக வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M. ராஜசேகரன் அவர்கள் ஆஜராகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்கள் செய்த வாதங்களை கேட்டு வழங்காவணங்களை பரிசீலனை செய்ததன் அடிப்படையிலும் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>தீர்ப்புரை</u>**

1ம் வாதியின் கணவரும் 2 முதல் 5 வரை வாதிகளின் தகப்பனாருமான பூச்சி மகன் மகாலிங்கம் என்பவரும் கடந்த 12.06.2022-ம் தேதியில் இயற்கை மரணம் அடைந்துள்ள நிலையில் மேற்படி மகாலிங்கம் என்பவருக்கு இந்த வாதிகளே சட்டப்படியான வாரிசுகள் என விளம்புகை கோரியும் மற்றும் 2ம் பிரதிவாதியால் வாரிசு

சான்றிதழ் வழங்க ஏதுவாக 2ம் பிரதிவாதி மீது ஒரு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வழக்குரையின் சுருக்கம்:**

தாவா வழக்கில் 1ம் வாதியின் கணவரும், 2 முதல் 5 வரை வாதியின் தகப்பனாரான பூச்சி மகன் மகாலிங்கம் என்பவர் கடந்த 12.06.2022ம் தேதி சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், மேட்டுமடை கிராமத்தில் வசித்து வந்து இறந்துவிட்டார். இறந்துபோன மகாலிங்கம் என்பவருக்கு இரண்டு மனைவிகள் ஆவார்கள். இறந்து போன மகாலிங்கம் முதல் மனைவியான ராக்கு என்பவரை திருமணம் செய்து வாழ்ந்து வந்ததில் ராக்கு என்பவர் மூலம் பிறந்தவர் தான் 2ம் வாதி ஆவார். முதல் மனைவி ராக்கு என்பவரும் கடந்த 1981ம் வருடத்தில் இறந்த பின்பு 1ம் வாதி கருப்பாயி என்பவரை திருமணம் செய்து வாழ்ந்து வந்ததில் கருப்பாயி என்பவர் மூலம் பிறந்தவர்கள் தான் 3 முதல் 5 வாதிகள் ஆவார்கள். வேறு எந்தவிதமான வாரிசுகளும் இல்லை. இறந்துபோன பூச்சி மகன் மகாலிங்கம் பெயரில் இருந்து வரும் சொத்துக்களை பாகம் பிரித்துக்கொள்ள வாரிசுச் சான்றிதழ் அவசியமாக தேவைப்படுவதால், 1ம் வாதி கருப்பாயி என்பவர் 2ம் பிரதிவாதியான மானாமதுரை வட்டாட்சியரிடம் இ சேவை மையத்தில் ஆன்லைனில் மனுச்செய்ததில் 2ம் பிரதிவாதியும் மனுவை பரிசீலனை செய்து, இறந்து போன மகாலிங்கம் என்பவருக்கு இரண்டு மனைவிகள் உள்ளதால் நீதிமன்றம் மூலம் பரிகாரம் பெற்றுக்கொள்ள அறிவுறுத்தி கடந்த 20.07.2022-ம் தேதி 2ம் பிரதிவாதி அலுவலகத்தில் மனுவை நிராகரிக்கப்பட்டுவிட்டதால் வாதிகளால் தாவா தாக்கல்.

**2. எதிர்வழக்குரையின் சுருக்கம்:**

வாதிகள் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் 2ம் பிரதிவாதியால் மறுக்கப்படுகிறது. பிராதில் கூறியுள்ள சங்கதிகளை மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கதக்கது அல்ல. இந்நீதிமன்றம் உத்தரவிடும் பட்சத்தில் 2ம் பிரதிவாதி வழங்க வாரிசு சான்றிதழ் வழங்க தயராக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

மேலும் மனுதாரர் இறந்து போன மகாலிங்கத்துக்கு வாதிகள் தான் வாரிசு என்பதாலும், அவருக்கு இரண்டு மனைவிகள் இருப்பதால் தான் வாரிசு சான்று வழங்க இயலவில்லை என்று பிரதிவாதிகள் தெரிவித்துள்ளார்கள்.

**3.** வாதி தரப்பில் சாட்சிகளாக 4ம் வாதி நதியா வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு மற்றும் 3ம் தரப்பினர் வாதி தரப்பில் சாட்சிகளாக வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு அவரின் முதன்மை நிரூபண வாக்குமூலங்கள் மற்றும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ-13 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றவாணங்கள் குறியீடு இல்லை.

**<u>4. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய எழுவினா யாதெனில்,</u>**

1. வாதிகள் இறந்துபோன மகாலிங்கம் என்பவரின் சட்டப்பூர்வ வாரிசுகள் என்பது உண்மையா?

2. வாதிகள் கோரும் விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

3. வாதிகள் கோரும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

4. தரப்பினர்களுக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரங்கள் என்ன?

**<u>5. எழுவினா 1-க்கான தீர்வு: வாதிகள் இறந்துபோன மகாலிங்கம் என்பவரின் சட்டப்பூர்வ வாரிசுகள் என்பது உண்மையா?</u>**

**5.1** வாதி தரப்பில் 1வது சாட்சியாக இவ்வழக்கின் 4ம் வாதி விசாரிக்கப்பட்டார். இறந்து போன மகாலிங்கம் என்பவர் கடந்த 12.06.2022ம் தேதி

விபத்தின் மூலம் இறந்துவிட்டதாகவும், அவருக்கு இரண்டு மனைவிகள் என்றும், முதல் மனைவி இறந்த பிறகு 1ம் வாதியாகிய கருப்பாயியை இரண்டாவது மனைவியாக திருமணம் செய்ததாகவோ, முதல் மனைவியின் பிள்ளை 2ம் வாதி என்றும், 3, 4, 5 வாதிகள் 2ம் மனைவியான கருப்பாயி மூலம் பிறந்தவர்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார். முதல் மனைவி இறந்த பிறகு தான் இரண்டாவது மனைவியான கருப்பாயியை திருமணம் செய்து கொண்டதாக தெரிவிக்கிறார்.

**5.2.** வா.சா.1ன் சாட்சியத்தை ஊர்ஜிதப்படுத்தும் (Corrabaration) விதமாக வா.சா.2ன் சாட்சியம் அமைந்துள்ளது.

**5.3.** பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையில் இறந்துபோன மகாலிங்கத்திற்கு இரண்டு மனைவிகள் என்பதால் தமிழக அரசின் முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை எண்.11/2017 மற்றும் ந.க.எண்.வ.நி.5(3)/180/2018, நாள்.09.08.2017-படி வட்டாட்சியர் இறந்தவர்க்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியோ/கணவரோ இருக்கும் இனங்களுக்கு வாரிசுசான்று வழங்ககூடாது என்பதால் மனு நிராகரிக்கப்பட்டதாக தெரிவிக்கிறார்கள்.

**5.4.** வாதி தரப்பு சாட்சியத்தில் இறந்து போன மகாலிங்கம் என்பவருக்கு 1 முதல் 5 வரையானவர்கள் மட்டுமே வாரிசுகள் என்றும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் மகாலிங்கத்தின் வாரிசுகள் தான் 1 முதல் 5 வரையானவர்கள் வாதிகள் என்ற ஆவணங்களின் படி வாதிகள் தரப்பு வழக்கறிஞரால் விளக்கப்பட்டு வாதம் உரையப்பட்டது.

**5.5.** வா.சா.ஆ.1 ஆவணத்திலிருந்து மகாலிங்கத்தின் வாரிசுகள் என்பதற்கான வம்சாவழி பட்டியல் என்பது தெளிவாகிறது.

**5.6.** வா.சா.ஆ.2 ஆவணத்திலிருந்து (மகாலிங்கத்தின் இறப்பு சான்றிதழ்) மகாலிங்கம் என்பவர் 12.06.2022ல் மதுரை, காந்திநகர், அரசு இராஜாஜி மருத்துவமனையில் இறந்துவிட்டது தெளிவாகிறது.

**5.7.** வா.சா.ஆ.3 ஆவணத்திலிருந்து வாதிகள் முறையாக உரிய அதிகார அமைப்பை அணுகி வாரிசு சான்றிதழ் கோரியுள்ள நிலையில் அவர்கள் அந்த மனுவை நிராகரித்துள்ளது தெளிவாகிறது.

**5.8.** வா.சா.ஆ.4 ஆவணத்திலிருந்து மகாலிங்கத்தின் குடும்ப அட்டை என்பது தெளிவாகிறது.

**5.9.** வா.சா.ஆ.5 ஆவணத்திலிருந்து 1ம் வாதி ஆதார் அடையாள அட்டையில் கருப்பாயி கணவர் பெயர் மகாலிங்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**5.10.**வா.சா.ஆ.6, 7 ஆவணத்திலிருந்து 2ம் வாதியின் குடும்ப அட்டை என்பது தெளிவாகிறது. 2ம் வாதியின் ஆதார் அடையாள அட்டையில் புஷ்பவள்ளி கணவர் பெயர் சுப்பிரமணியன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**5.11.** வா.சா.ஆ.8 ஆவணத்திலிருந்து 3ம் வாதியின் ஆதார் அடையாள அட்டையில் இருளாயி தந்தை பெயர் மகாலிங்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**5.12.** வா.சா.ஆ.9, 10 ஆவணத்திலிருந்து 4ம் வாதியின் குடும்ப அட்டை மற்றும் ஆதார் அடையாள அட்டை என்பது தெளிவாகிறது.

**5.13.** வா.சா.ஆ.11, 12 ஆவணத்திலிருந்து குடும்ப அட்டை மற்றும் ஆதார் அடையாள அட்டையில் 5ம் வாதி லிங்கபிரபு தந்தை பெயர் மகாலிங்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து 1ம் வாதி இறந்துபோன மகாலிங்கத்தின் மனைவி என்பதும், 2 முதல் 5 வாதிகள் இறந்து போன மகாலிங்கத்தின் மகன் மற்றும் மகள்கள் என்பதும் தெளிவாகிறது.

**5.14.** மேற்கண்ட வாதிகள் தரப்பு ஆவணங்களிலிருந்து இறந்து போன மகாலிங்கம் என்பவருக்கு வாதிகள் தான் வாரிசுகள் என்பது தெளிவாகிறது.

**5.15.** மேற்கண்ட வாதிகள் தரப்பு சான்றாவணங்களை ஊர்ஜிதப்படுத்தும் (Corroboration) வகையில் வா.சா.1ன் வாய்மொழி சாட்சியம் அமைந்துள்ளது.

**5.16.** வாதி தரப்பு சாட்சி1ன் சாட்சியத்தை ஊர்ஜிதப்படுத்தும் (Corroboration) வகையில் வா.சா.2-ன் வாய்மொழி சாட்சியம் அமைந்துள்ளது.

**5.17.**மேற்கண்ட விவதாங்களிலிருந்து சாட்சிய சான்றாவணங்களிலிருந்து இந்திய சாட்சிய சட்டம் பிரிவு.101ன் படி வாதிகள் தாங்கள் கூறிய பொருண்மையை நிரூபித்துள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**5.18.** இந்திய சாட்சிய சட்டம் பிரிவுகள்.101, 103, 106 ஆகிய பிரிவுகளின் கீழ் தங்கள் வழக்கை நிரூபித்துள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**5.19.** வாதிகள் தாக்கல் செய்துள்ள சாட்சியங்கள் சான்றாவணங்களிலிருந்து 1 முதல் 5 வாதிகளும் இறந்து போன மகாலிங்கத்தின் வாரிசுகள் என்பது தெளிவாகிறது. அதே சமயம் வாதிகள் தாக்கல் செய்த சாட்சிகள் மற்றும் சான்றவாணங்களில் இருந்து தான் இவ்வழக்கில் தீர்வு காணப்படுகிறது. வாதிகள் மட்டுமே இறந்து போன மகாலிங்கத்தின் வாரிசுகள் என்று கூற இயலாது. எனவே வாதிகளும் இறந்து போன மகாலிங்கத்தின் சட்டப்பூர்வ வாரிசுகள் என்று 1ம் எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

6. **<u>எழுவினா 2-க்கான தீர்வு: வாதிகள் கோரும் விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?</u>**

1வது எழுவினாக்களுக்கான விடைகளின் அடிப்படையில் வாதிகளும் இறந்து போன மகாலிங்கத்தின் வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் பெற அருகதை உடையவர்கள் என்று 2ம் எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>7. எழுவினா 3-க்கான தீர்வு: வாதிகள் கோரும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?</u>**

7.1. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில் முடிவு காணப்படுகிறது.

7.**2.** மேற்படி பரிகாரத்தை பொறுத்து வாதிக்கு தாவா வழக்கில் செயலுறுத்துக்கட்டளை வழங்க முடியமா என்பதை பார்க்கும் பொழுது பிரிவு 39 குறித்த வகை நிவாரணச்சட்டத்தின் படி சட்டப்படியான கடமை 2-ம் பிரதிவாதிக்கு இருந்தால்

மட்டுமே மேற்படியான பரிகாரத்தை வழங்க முடியும்.

"Section 39 of The Specific Relief Act deals with the relief of Mandatory Injunction, it states as "When, to prevent the breach of an obligation, it is necessary to compel the performance of certain acts which the court is capable of enforcing, the court may in its discretion grant an injunction to prevent the breach complained of, and also to compel performance of the requisite acts." Mandatory Injunctions are contemplated under section 39 of the Specific Relief Act, and is granted where it is necessary to prevent the breach of an obligation of the erring party, and the party may be compelled to perform certain acts. Such Injunction can be granted under following circumstances:

1. There must be an obligation on part of the defendant to perform certain acts the breach of which, must be alleged by the plaintiff.
2. Such relief must be enforceable by the court.

மேலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் In V.Kamatchi Vs State of Tamilnadu and others (C.R.P.NPD.No.2421 of 2012) of the Hon'ble High Court held that "...It is a well settled proposition of law that the legal heir ship certificates issued by the Tahsildar are not under any statute and he is also not the competent authority, legally. Only for administrative purpose, they are issuing such certificates, over which, the Courts are not concerned. Whenever there arises any dispute, such legal heirship certificates issued by the Tahsildar are having no back up of the law. As such, that prayer has to be deleted..."

மேற்சொன்ன மாண்புமிகு உயர்நீதிமன்ற வழங்கிய தீர்ப்புரை மற்றும் பிரிவு 39 குறித்த வகை நிவாரணச்சட்டத்தின் படி 2ம் பிரதிவாதிக்கு சட்டப்படியான கடமை இருக்கிறது என்று இந்நீதிமன்றத்தால் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க முடியாது. எனவே வாதிகள் கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல. முடிவாக வாதி கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து எழுவினா 2-யை வாதிகளுக்கு எதிராக முடிவு செய்கிறது.

8. <u>எழுவினா 4-க்கான தீர்வு: தரப்பினர்களுக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரங்கள் என்ன?</u>

மேலே விவாதித்த எழுவினா 1, 2 வாதிகளுக்கு ஆதரவாக இறந்து போன மகாலிங்கத்திற்கு வாதிகள் தான் வாரிசுகள் என விளம்புகை செய்து பரிகாரம் வழங்கி தீர்மானித்துள்ளதாகவும், எழுவினா 3-யை வாதிகளுக்கு எதிராக முடிவு கண்டு பகுதியாக வழக்கை வாதிகளுக்கு அனுமதித்துள்ளதால் வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலை கருத்தில் கொண்டு வேறு பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல. மேற்படி எழுவினா 4 தீர்மானிக்கப்படுகிறது.

**முடிவாக வாதிகளும் இறந்துபோன மகாலிங்கத்தின் சட்டப்படியான வாரிசுகள் என விளம்புகை பரிகாரம் வழங்கியும் மற்றும் வாதிகளும் கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து பகுதியாக வழக்கு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை என்று தீர்மானிக்கப்படுகிறது.**

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு ஜீன் மாதம் 27ம் நாளாகிய இன்று என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

ஒப்பம்/திரு.S.முகமது யூசுப் நவாஸ்,27.06.2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

<u>வாதிகள் தரப்பின் சாட்சிகள்:</u>

வா.சா.1 - நதியா க/பெ. சுரேஷ் (வழக்கு 4ம் வாதி)

வா.சா.2 - தினகரன் த/பெ.சோனைமுத்து

<u>வாதிகள் தரப்பின் சான்றாவணங்கள்:</u>

வா.சா.ஆ.1 வம்சாவழி பட்டியல் அசல்

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.2 | 17.06.2022 | பூச்சி மகன் மகாலிங்கம் கடந்த 12.06.2022ம் தேதி இறந்ததற்குரிய இறப்புச்சான்றிதழ் இணையதள பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.3 | 20.07.2022 | இறந்து போன பூச்சி மகன் மகாலிங்கம் என்பவருக்கு வாரிசுச்சான்றிதழ் கேட்டு ஆன்லைன் மூலம் 1ம் வாதி 2ம் பிரதிவாதிக்கு மனு செய்துள்ளதை 2ம் பிரதிவாதி நிராகரிப்பு செய்தததற்குரிய ஆவணம் இணையதள பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.4. | | 1ம் வாதியின் குடும்ப அட்டை நகல் |
| வா.சா.ஆ.5 | | 1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் |
| வா.சா.ஆ.6 | | 2ம் வாதியின் குடும்ப அட்டை நகல் |
| வா.சா.ஆ.7 | | 2ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் |
| வா.சா.ஆ.8 | - | 3ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் |
| வா.சா.ஆ.9 | - | 4ம் வாதியின் குடும்ப அட்டை நகல் |
| வா.சா.ஆ.10 | - | 4ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் |
| வா.சா.ஆ.11 | - | 5ம் வாதியின் குடும்ப அட்டை நகல் |
| வா.சா.ஆ.12 | - | 5ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் |
| வா.சா.ஆ.13 | - | வா.சா.2ன் ஆதார் அடையாள அட்டை நகல் |

பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் இல்லை.

ஒப்பம்/திரு.S.முகமது யூசுப் நவாஸ்,27.06.2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

/உண்மை நகல்/

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

District Munsif Court

Manamadurai

OS 59/2022

Fair Judgment

27.06.2024